# தூதன்

தூதன்-27 | மே 2018 | தூது-5

"ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்." கலாத்தியர் 6:2




தென்னிந்தியத் திருச்சபை, தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 05 |
| உதவி போதகர் மடல் | 08 |
| உதவி ஆயரம்மா மடல் | 10 |
| செயலர் மடல் | 12 |
| மே ஒண்ணு! தொழிலாளர் மேல் கண்ணு!! | 14 |
| ஆராதனை பாடல்கள் | 16 |
| நீங்கள் கிறிஸ்தவரா | 17 |
| Young Readers Column | 18 |
| திருச்சபை ஜெபநாள் | 20 |
| கேதுரு / தேவதாரு மரம் | 22 |
| வேதவினா போட்டி | 24 |
| தெரிந்து கொள்வோம் | 26 |
| Health Tips | 28 |
| தெரிந்த சத்தியம்! தெரியாத உண்மை!! | 30 |
| Birthday Celebrants | 32 |
| Wedding Anniversary Celebrants | 36 |
| What happened after Herod Temple was burnt | 39 |



P.O.Box: 8785, Dubai. Ph: 04-2552065, 04-2249249(office), Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.com, E-mail: tamilcsi@eim.ae

# சபை போதகர் மடல்

## மனிதநேய வாழ்வை நோக்கி (Towards Humanitarian Life)

"ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்" (கலாத்தியர் / Galatians 6:2)

கிறிஸ்துவுக்குள் எனதருமை உடன் விசுவாசிகளே,

"உழைத்து மரித்தும் உயிர்த்த நாதரின்
உயர்பதவியில் என்றும் நிலைப்பாய்
நீயுனக்குச் சொந்தமல்லவே...
நிமலன் கிறிஸ்து நாதர்க்கே சொந்தம்"

தம் உயிரைத் தியாகம் செய்து, கடினமாய் உழைத்து, நமக்கு மீட்பை உண்டு பண்ணி, நம்மைக் கடவுளின் பிள்ளைகளாக மீண்டும் இணைத்து, இன்றளவும் நமக்காகப் பரிந்து பேசிக்கொண்டிருக்கிற அருள்நாதராம் இயேசுகிறிஸ்துவின் ஈடுஇணையற்ற திருப்பெயரில் உங்கள் அனைவருக்கும் புதிய மாத நல்வாழ்த்துக்களையும், உழைப்பாளர் திருநாள் நல்லாசியையும் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். உழைக்கும் அனைத்து மக்களையும் கர்த்தர் ஆசீர்வதிக்கிறார்; அதேநேரம் சோம்பேறிகளின் அப்பத்தைப் புசிப்பதையும், பிறர் பொருளை இச்சிப்பதையும், எளியவரின் உழைப்பைச் சுரண்டி வாழ்வதையும் அவர் கண்டிக்கிறார். கடினமான உடல் மற்றும் மன உழைப்பைச் செய்யும், சுயதொழில் செய்யும் அனைவருக்காகவும், வீடுகளிலும் பல்வேறு நிறுவனங்களிலும் சமுதாயப் பணிகளிலும் உழைக்கும் அனைவருக்காகவும் இறைவனிடம் வேண்டுவோம். ஆண்டவர் நமக்குத் தந்த உழைப்பின் ஆசீர்வாதமான இந்த நல்ல தேசத்திற்காகத் தொடர்ந்து ஜெபிப்போம். (Greetings to you all in the matchless name of our Lord and Redeemer Jesus Christ who has labored his life for our salvation. Special greetings on the occasion of labour day and may the good Lord strengthen and bless all people who labour hard. But God condemns those who are lazy. Pray for this wonderful country for the blessing of the labour).

2018-ம் ஆண்டை உலகத் திருச்சபை மாமன்றமானது "அனைவருக்குமுரிய வாழ்வின் ஆண்டாக" அறிவித்து பல்வேறு அறைகூவல்களை திருச்சபைகளுக்கும், விசுவாசிகளுக்கும் முன்னே வைத்துள்ளது. அதன் பல்வேறு பரிமாணங்களை கடந்த மாத

செய்திகளில் திருமறையின் வெளிச்சத்தில் நாம் புரிந்துகொள்ள முயற்சித்தோம். இம்மாத சிந்தனை 'மனிதநேய வாழ்வை நோக்கி'யதாகும். வன்கொடுமைகளும், பலாத்காரங்களும், சுயநலங்களும், பிரிவினைகளும், துரோதங்களும் பெருகி வாழ்வைச் சிதைக்கும் இக்காலச் சூழ்நிலையில் 'மனிதநேய வாழ்வு' மிகவும் அவசியமானதாகும். அது விருந்தோம்பலை மட்டும் குறிக்காமல், 'பிறர் வாழ்வில் என் வாழ்வு பிண்ணிப் பிணைந்துள்ளது' என்ற புரிதலையும், அதன்வழியே செயல்படும் ஆற்றலையும் தருகிறது. திருப்பாடல்கள் 41:1-ன்படி "சிறுமைப்பட்டவர்கள் மேல் சிந்தையுள்ளவர்கள் பேறுபெற்றோர், தீங்குநாளில் கர்த்தர் அவரை விடுவிப்பார்". நல்ல சமாரியன் உவமையின் வழியே 'எனக்குப் பிறன் யார்' என்று கேட்ட கேள்விக்கு, 'என்னையே நல்ல பிறனாக இருந்திட' ஆண்டவர் இயேசு அழைக்கிறார். நம் விசுவாச வாழ்வின் அடித்தளமாக விளங்கும் திருமறை முழுவதும் இதே கருத்து ஆழமாக நிற்கிறது. (As the World Council of Churches has declared the year 2018 as 'Together Towards Life' and challenging every churches and individuals to strive for it, we too meditate upon one of its perspectives 'Towards Humanitarian Life' in this month. We are called to practice humanitarianism not only in hospitality but also showing compassion to the meek and lowly (Ps.41:1). Being and becoming a good neighbour to someone instead of expecting someone to be our neighbour is the need of the hour).

### திருமறையின் சில அடிப்படை மனிதநேய சிந்தனைகள்:

(Some basic Biblical Insights on humanitarianism)

1.ஏழ்மையை வேரறுத்து, சமத்துவ சமுதாயம் ஏற்படுத்தவேண்டும்.
(Eradicating poverty and establish social equilibrium) (நீதி./Prov. 19:17,22:9, உபாகமம் / Deut.15:11).

2. நன்மையைச் செய்யத்தக்கவர்களுக்கு நிச்சயமாய் செய்யவேண்டும்.
(Do not withhold good from those to whom it is due) (நீதி./Prov. 3:27).

3.செய்யும் நன்மையை / தருமத்தை விளம்பரமின்றிச் செய்யவேண்டும்.
(Do good without publicity) (மத்தேயு / Matthew 6:3).

4.புதுவாழ்வு தேவைப்படுவோருக்குப் புதுவாழ்வு தரவேண்டும்.
(Provide new life to those who need it) (மத்தேயு / Matthew10:8).

5.சமநிலைவரக் கொடு, அப்பொழுது உன் அளவின்படிகொடுக்கப்படும். (Receive accordingly by your giving, otherwise not) (2 கொரிந்தியர் / 2 Corinthians 8:13,15, லூக்கா / Luke 6:38).

6. ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டும்.
(Love one another) (யோவான் / John 15:13).

7. எல்லாவற்றையும் பொதுவாய் வைத்து அனுபவிக்கவேண்டும்.
(Have everything is common) (அப்./Acts 4:34).

8. வெறும் வார்த்தை மட்டும் போதாது, செயல்பாடும் வேண்டும்.
(Not only verbal but also action is required) (யாக். / James 1:27, 2:26).

9. உழைத்து வாழவேண்டும், வாழ வைக்க வேண்டும். இச்சித்தல் சோம்பியிருத்தல் கூடாது. (Live and let live by labour and do not live on laziness) (எபேசியர் / Ephesians 4:28).

இப்படி எண்ணற்ற மனிதநேய ஆலோசனைகளைத் திருமறை வழங்குகிறது. இப்படிச் செய்கிறவர்களுக்குரிய பலனை ஆண்டவர் நிச்சயம் தருகிறார் (எபிரேயர் 6:10, 13:16). இரு வகைகளில் நாம் மனிதநேயத்தை மற்றவரிடம் வெளிப்படுத்தலாம்.

1. வார்த்தையின் வழியே
   (ஆலோசனை, இறைவேண்டல் போன்றவை)
2. செயல்களின் வழியே
   (கரிசனை, உதவி, ஒத்தாசை, நன்மை போன்றவை).

சமூகக் கரிசனையற்ற விசுவாசமும், சுயம் சார்ந்த விசுவாசமும் பயனற்றது. மத்தேயு 25-ம் அதிகாரத்தின் இறுதிநாள் தீர்ப்பு மனிதநேய அடிப்படையிலேயே வழங்கப்படுகிறது. மனிதநேயம் வளர்ப்போம்! மன்னராம் இயேசுவைப் பிரதிபலிப்போம்!! ஆமென். (There are several other insights existing in the treasury of the Bible. God rewards those who are humanitarian (Heb.6:10, 13:16). It can be expressed both in word (Counseling, Prayer etc) and by deed (Good doing, supporting material, solidarity with the needy etc). The faith without care and compassion is useless. The final judgement mentioned in Matthew 25th chapter is based on humanitarian acts. Let's do it and reflect the Lord Jesus! Amen).

இறைப்பணியில் ஆயர்,
அருள்திரு. சே.கிறிஸ்தோபர் ரத்தினசாமி,
சபை போதகர்.

# ஆயரம்மா மடல்

## திருச்சபை என்னும் மணமகள் (Church the Bride)

"இந்த இரகசியம் பெரியது; நான் கிறிஸ்துவைப்பற்றியும் சபையைப்பற்றியும் சொல்லுகிறேன்." (எபேசியர் / Ephesians 5:32)

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

கடவுளைத் தந்தையாக மட்டுமல்ல, தாயாகவும் புரிந்து விசுவாசிக்கிறோம். திருமறையில் ஆண்களைப்போல பெண்களையும் தலைமைத்துவம், தன்னம்பிக்கை, தைரியம், பக்தி, விசுவாசம், செயல்பாடு, விடாமுயற்சி போன்ற அனைத்திலும் பார்த்து, படித்து, புரிந்து கொண்டிருக்கிறோம். அப்படியே திருச்சபையையும் கடவுளின் மணவாட்டியாக, ஒரு பெண்ணாக, மனைவியாகக் காட்டுவதையும் புரிந்து கொள்ளுகிறோம். கிறிஸ்து தம்முடைய தியாக உழைப்பினாலே, மீட்டுக்கொண்ட இந்த மணவாட்டியாகிய திருச்சபை திருச்சமூகத்தை வாழ்த்தி, உழைப்பாளர் திருநாள், திடப்படுத்துதல் திருநாள், பெந்தெகொஸ்தே திருநாள் போன்ற சிறப்பு நாட்களின் நல்லாசியையும் பகிர்ந்து கொள்கிறேன். திருச்சபையைப் பெண்ணாகப் பார்க்கும் பார்வையில் வேதத்தின் அடிப்படையில் சில கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

### திருச்சபை - ஒரு பெண்பால் சொல் (Church is a feminine Noun):

எக்ளேஷியா (Ekklesia) என்ற கிரேக்க வார்த்தை திருச்சபையைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதில் ஆச்சரியம் என்னவென்றால் அது ஒரு பெண்பால் சொல்லாக விளங்குகிறது. பெரும்பாலும் இன்று வரையிலும் ஆண்களுக்கு நிகரான வாய்ப்புகள் திருச்சபையில் பெண்களுக்குக் கொடுக்கப்படாவிட்டாலும் திருச்சபையே ஒரு பெண்ணாக மட்டுமே புரிந்து கொள்ளப்படுகிறது என்பதை நாம் அறிந்துகொள்வோம். அதற்கு அடிப்படையான காரணம், கடவுள் தன்னைக் கணவனாகவும் (அ) மணவாளனாகவும் வெளிப்படுத்தி மக்கள் சமுதாயத்தை (அ) திருச்சபையை மனைவியாகவும், மணவாட்டியாகவும் வெளிப்படுத்துகிறார். இதுவே உடன்படிக்கையின் நித்திய உறவு. இதைப் பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் வெளிச்சத்தில் காண முயற்சி செய்வோம்.

**1. யேகோவாவும் இஸ்ரவேலும் (Israel married to Jehovah):** எரேமியா 3:1-14 வசனங்கள் வரையுள்ள பகுதியில் இஸ்ரவேலைத் தன் மனைவியாக உடன்படிக்கை உறவில் அறிவிக்கும் ஆண்டவர், அவள் சோரம் போனபோது அவளைத் திருத்தி தன்னிடமாய்த் திரும்பும்படி அழைக்கிறார். இதையே ஓசியா 2-ம் அதிகாரத்திலும் குறிப்பிடுகிறார். முதன்முதலில் பெண்ணை ஆணுடைய விலா எலும்பிலிருந்து உருவாக்கி இசைவாய் இறையுறவில் வைத்திருந்த கடவுள் அதையே தமக்கும் தம் மக்களுக்கும் இடையேயான புனித உறவாக வெளிப்படுத்துகிறார். ஏசாயா 54:1-7 வரையுள்ள தீர்க்கதரிசன பகுதியிலும் தன்னை உண்மையுள்ள உடன்படிக்கையின் மணவாளனாகக் காட்டும் கடவுள் இஸ்ரவேலை மலட்டுத்தன்மையிலிருந்து அநேகம் பிள்ளைகள் பெறும் மனைவியாகவும், விதவையாயிருந்து கைவிடப்பட்ட நிலையிலிருந்து மீண்டும் விவாக மனைவியாகவும், விவாகம் செய்து தள்ளப்பட்ட நிலைமையிலிருந்து மீண்டும் விவாக மனைவியாகவும் மாற்றி இப்புனித உறவை நிலைப்படுத்துகிறார். ஏசாயா 62:5-ன்படி இந்த மணவாட்டியின்மீது மணவாளனாகிய கர்த்தர் மகிழ்ச்சியாயிருப்பார் என்ற வாக்குத்தத்தம் இழந்துபோன வாழ்வு மீண்டும் புதுப்பிக்கப்பட்டதை உறுதி செய்கிறது. இப்படி முதல் உடன்படிக்கையான பழைய ஏற்பாட்டில் இன்னும் அனேக தீர்க்கதரிசனங்கள் கடவுளை மணவாளனாகவும், இஸ்ரவேல் மக்களை அல்லது இறைமக்களை மணவாட்டியாகவும் சித்தரித்து, உடன்படிக்கை உறவில் கர்த்தரால் அலங்காரமும், சுதந்தரமும், மகிமையும் பெற்ற மணவாட்டியாக எடுத்துக்காட்டுகின்றன. (பார்க்க : எசேக்கியேல் 16:8-14).

**2.கிறிஸ்துவும் திருச்சபையும் (Church betrothed to Christ):** திருமண சாக்கிரமெந்து ஆராதனைகளில் பெரும்பாலும் பயன்படுத்தப்படும் உருவகமான "கிறிஸ்து மணவாளன் திருச்சபை மணவாட்டி" என்ற பவுலின் இரகசியக் கூற்றானது (எபேசியர் 5:32) கிறிஸ்துவுக்கும், திருச்சபைக்கும் உள்ள உறவு கணவன் மனைவி உடன்படிக்கை புனித உறவு என்று உறுதி செய்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் இந்த லௌகீக உறவை தெய்வீக உறவுடன் இணைத்துக் கொண்டாடுகிறார். ஏனெனில் ஆண் பெண் இசைவான இணைப்பைக் கடவுளே ஏற்படுத்தி அதைக் கணவன் மனைவி உறவாக்கி (எபேசியர் 5:21-33) அதை ஒவ்வொரு தனிப்பட்ட விசுவாசி மற்றும் அனைத்து விசுவாசிகளின் திருச்சமூகமாகிய திருச்சபையுடன் இணைத்து மணவாட்டி/மனைவி என்று குறிப்பிடுகிறார்.

கிறிஸ்துவே இக்குடும்பத்தின் தலைவர். அவர் தன் தகப்பனை விட்டு தன் உடன்படிக்கையின் மனைவியாகிய நம் ஒவ்வொருவருக்காகவும், கூட்டான திருச்சபைக்காகவும் தம்மையே அர்ப்பணித்து இத்தெய்வீக உறவின் மகத்துவத்தை வெளிப்படுத்தினார் என்றால் மிகையாகாது. கடைசிநாளில் இயேசுகிறிஸ்து மீண்டும் வரும்போது “நாம் சந்தோஷப் பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதி செலுத்தக்கடவோம். ஆட்டுக் குட்டியானவருடைய கல்யாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள்” (வெளி.19:7) என்ற வாக்குத்தத்தம் நிறைவேறும்.

ஆகவே, பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளைக் கொண்ட திருமறை முழுவதும் கடவுள் கணவனாகவும், மக்கள் மனைவியாகவும் சித்திரிக்கப்படும் புதிய உறவு காணப்படுகிறது. இதன்மூலம் கடவுளோடு நாம் கொண்டுள்ள உறவையும், பக்தியையும், சாட்சியையும் புனிதமாய்க் காப்போம்! குடும்ப உறவுகளின் புனிதத்தைக் காப்போம்! திருச்சபையாம் இறைக்குடும்பத்தின் உண்மையான உடன்படிக்கையைக் காப்போம்! மணவாளனின் இரண்டாம் வருகையில் ஆயத்தமுள்ள மனைவியாகச் சேரும் மட்டும் விழிப்புடன் இருப்போம்!! (மத்தேயு 25:1-13) ஆமென்!!!

இறைப்பணியில்,
திருமதி. தீபா கிறிஸ்தோபர், ஆயரம்மா,
பெண்கள் ஐக்கிய சங்கத்தலைவி.

## திருமறைப் பாட ஒழுங்குகள் - மே 2018

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 04-05-2018 திடப்படுத்துதல் | உறுதி செய்தல் | எசேக். 36:26-28 | ரோமர் 8:12-17 | யோவான் 14:15-17 | 119: 105-112 |
| 11-05-2018 உழைப்பாளர் திருநாள் | கடவுளின் வேலையில் பங்குபெறுதல் | யாத்தி. 36:1-13 | அப்போ. 9:36-43 | யோவான் 4:34-38 | 104:23-35 |
| 18-05-2018 பெந்தேகொஸ்தே திருநாள் | வாரும் தூய ஆவியானவரே புதுப்பியும் | எசேக். 37:1-14 | அப்போ. 2:1-13 | யோவான் 16:1-11 | 139:1-16 |
| 25-05-2018 Junior Church சிறப்பு வழிபாடு | சிறுவரும் இறைக் குடும்பமும் | நீதிமொழி. 3:1-12 | எபேசியர் 6:1-4 | மத்தேயு 18:1-6 | 127 |

# உதவி போதகர் மடல்

## வாக்குத்தத்த செய்தி

### உன் கண்களை ஏறெடுத்துப் பார் (ஆதியாகமம் 13:14)

நம்பினோரை ஆச்சரியமாய் நடத்த வல்லமையுள்ள ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

இப்புதிய மாதத்தைக் காண ஆண்டவர் கிருபை செய்திருக்கிறார். அவரைச் சார்ந்து வாழும் வாழ்வில் நமக்குப் போதுமானவராக, தேவைகளைச் சந்திக்கிறவராக, புது பெலன் கொடுத்து அனுதினமும் நம்மை இந்த மாதத்தில் நடத்த வல்லவராயிருக்கிறார்.

நாம் ஆண்டவரால் நடத்தப்பட அவரைச் சார்ந்து கொள்ள ஒப்புக் கொடுப்போமாயின் இந்த மாதம் நமக்குக் கொடுக்கும் அருள்வார்த்தை "உன் கண்களை ஏறெடுத்துப்பார்".

ஆபிரகாமை அழைத்த ஆண்டவர், இந்த வார்த்தை சொல்லும்போது ஒரு ஆசீர்வாதம் அவனுக்கு உண்டாகிறதைப் பார்க்கிறோம். இதே ஆசீர்வாதத்தை இந்த மாதம் நமக்கும் தர வல்லவராயிருக்கிறார்.

எப்பொழுது ஏறெடுத்துப்பார் என்ற அருள் வார்த்தை நம் வாழ்வில் கிரியை செய்யும்படி செய்வார் என்பதை 3 குறிப்புகளில் காணலாம்.

**1.ஏறெடுத்துப்பார்: பிரித்தெடுக்கப்பட்ட பின் (ஆதியாகமம் 13:14) :**
யாரை, எதை, விட்டு பிரித்து எடுக்கப்படவேண்டும்? தேவன் ஆபிரகாமை லோத்தை விட்டு பிரித்தெடுத்தார். லோத்து எண்ணம் சிந்தை உலகத்தைச் சார்ந்ததாகவே இருந்தது (சோதோம் மேல் விருப்பம்). ஆபிரகாமோ வாக்குத்தத்தம் செய்தவரையும் அவர் அருளிய வாக்குத்தத்தத்தையும் நோக்கிப் பயணித்தவன் (கானான்). நம்முடைய ஐக்கியம் யாரோடு, இப்படிப்பட்டவர்களை விட்டு விலகும்போது ஆபிராமைப் பார்த்துச் சொன்னார். உன் கண்களை ஏறெடுத்துப்பார் என்றார். அதில் தொடர்ச்சியான ஆசீர்வாதங்கள் உண்டு (வ.15) சுதந்தரித்துக்கொள்வாய் (வ16), விருத்தியும் பெருக்கமும் நடந்து திரி. ஒரு சத்துருவும் உனக்குத் தடை செய்வதில்லை. நீ செய்வது வாய்க்கும். நம்மை ஆராய்ந்து பார்த்து தேவன் விரும்பாத உலக சிநேகம், சிந்தையுமுள்ளவர்களோடு உள்ள ஐக்கியத்தை விடுவோம். ஆசீர்வாதம் பெறுவோம். வாக்குத்தத்தத்தை நோக்கிப் பயணிப்போம்.

**2. ஏறெடுத்துப்பார்: மாம்சசிந்தை அழிக்கப்படும்போது (ஆதியா. 17:26):** ஆபிரகாமோடு ஆண்டவர் செய்த உடன்படிக்கைக்கு அடையாளமாக விருத்தசேதனத்தை நியமித்தார். (ie.) மாம்சம் வெட்டி எரியப்படுதல் இதைச் செய்து நிறைவேற்றின பின்பு, அவன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது (ஆதி.18:2) பரலோகத்தின் தூதர்களைக் கண்டான். அவர்கள் அவனுக்கு நல்ல செய்தி கொண்டு வந்தார்கள். நீண்ட நாள் காத்திருக்குதலை முடிவுக்குக் கொண்டுவந்தனர். தடைபட்டுப்போன நன்மை உண்டாகும் என்று சொல்லப்பட்டது பரலோகத்திலிருந்து வந்த தூதர்களால்.

வாழ்வில் இன்பம் உண்டா? என்று வாழ்வில் வெறுப்புற்ற நிலையில் இருந்த சாராளுக்குச் சொல்லப்பட்டது, கர்த்தரால் ஆகாத காரியம் இல்லை என்று (வ14). இந்த மாதம் நமக்கும் இதே ஆசீர்வாதத்தைக் கொடுப்பார்.

கலாத்தியர் 5:19-21 வசனங்களை வாசித்துப் பார்க்கும்போது மாம்ச கிரியைகளைக் குறித்து பவுல் எழுதுகிறார். இவைகள் நம் தனிப்பட்ட வாழ்வில் இருந்து, குடும்பத்திலிருந்து, சபையிலிருந்து வெட்டி எரியப்படும்போது ஆசீர்வாதம் பரத்திலிருந்து உண்டாகும்.

**3. ஏறெடுத்துப்பார்: கீழ்ப்படிகிறவர்களுக்கு (ஆதியாகமம் 22:13) :** கீழ்ப்படிதலுக்கு நல்ல உதாரணம் ஆபிரகாம். கீழ்ப்படிகிறவர்களுக்குச் சகலமும் ஆயத்தமாயிருக்கிறது. ஆண்டவர் கேட்டபடியினால் தன் மகனைப் பலி செலுத்தக் கொண்டு சென்றான். தன்னிடம் இருந்த சிறப்பை ஆண்டவருக்கு அர்ப்பணிக்கச் சென்ற அந்த கீழ்ப்படிதலைத் தேவன் கனம் பண்ணினார். அவன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது (22:13) ஒரு ஆட்டுக்குட்டியைக் கண்டான். அதைப் பலி செலுத்தி யெகோவாயீரே என்று பெயரிட்டார். அதற்குக் கர்த்தருடைய பர்வதத்தில் பார்த்துக் கொள்ளப்படும் என்று அர்த்தம்.

தேவ கட்டளைக்கும், விருப்பத்திற்கும் கீழ்ப்படிகிறவர்களுடைய வாழ்க்கையில் கர்த்தர் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார். யெகோவாயீரேயாக இந்த மாதம் தேவன் உங்கள் வாழ்வில் வெளிப்படுவார்.

உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்.

உங்களுக்காக ஜெபிக்கும்,
அருள்திரு. ஆல்வின் பிரைட்.
உதவி போதகர்.

# உதவி ஆயரம்மா மடல்

இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்.

## சிந்திக்க ஒரு சிறுகதை

இனியனுக்குப் புதிதாக எந்தப் பொருளைக் கண்டாலும் ஆசை வந்துவிடும். எப்படியாவது அதை எடுத்துவிடுவான். சிலவேளைகளில் மாட்டிக்கொண்டு அடிபட்டதும் உண்டு. அவனுடைய அம்மா எத்தனை முறை எச்சரித்தாலும், அவன் அதற்குச் செவிகொடுக்கவில்லை.

டேய், மற்றவர் பொருளுக்கு ஆசைப்படக்கூடாது. அதைத்தான் பைபிளில் இச்சை எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இச்சையடக்கம் என்பது ஆவியின் கனியாகும். இச்சையடக்கம் இல்லாமல் உன்னால் இயேசுசாமியின் பிள்ளையாக இருக்க முடியாது என அம்மா எச்சரித்தார்கள். சரியம்மா என இனியன் பெரிதாகத் தலையாட்டினான். ஆனாலும், இச்சையை மேற்கொள்ள அவனால் முடியவில்லை.

அவன் Junior Churchக்குச் சென்றபோது மறுபடியுமாக ஆசைக்கு அடிமையாகிவிட்டான். அங்கு, அவனுடைய Junior வகுப்பு டீச்சர் விமலி வைத்திருந்த iphone x cellphone-ஐப் பார்த்ததும், அதை எப்படியாவது எடுத்துவிடவேண்டுமென ஆசை வந்தது. விமலி அன்றுதான் அந்த புதிய cellphoneஐ church-க்கு கொண்டு வந்திருந்தார்கள்.

விமலி ஒரு skit-ல் நடிக்கும்படி முன்சென்றார்கள். அவர்கள் Handbag-ஐயும், cellphone-ஐயும், இனியன் உட்கார்ந்திருந்த chair-க்கு நாலு chair தள்ளி, ஒரு side shelf-ல் வைத்துவிட்டு, நடிக்கும்படி முன்சென்றார்கள். எல்லாரும் உற்சாகமாக skit பார்த்துக் கொண்டிருந்தபோது, இனியன் தண்ணீர் குடிக்கச் செல்லுவதுபோல நடித்து, யாரும் பார்க்காத வேளையில் அந்த Cellphoneஐ எடுத்துத் தன் கால்சட்டைப்பையில் திணித்துக் கொண்டான்.

அவன் தன் இருக்கையில் அமர்ந்து, தான் அந்த cellphone-ல் பேசுவதுபோல நினைத்துப் பார்த்தான். எவ்வளவு சந்தோஷமாக இருந்தது. Common class முடிந்தது. விமலி தன் Handbag-ஐயும், cellphone-ஐயும் எடுத்துக்கொண்டு, Junior வகுப்புக்குச் செல்லவேண்டும் என நினைத்துக்கொண்டு, shelf அருகே வந்தபோதுதான், cellphone காணவில்லை என தெரிந்துகொண்டார்கள். அவர்கள் பதற்றத்துடன் cellphoneஐத் தேடத் துவங்கினார்கள்.

அதைப்பார்த்த அருகிலிருந்த மற்ற ஆசிரியர்கள், என்ன விமலி? என்ன ஆயிற்று என்றார்கள். இங்கே வைத்திருந்த என் phone-ஐக் காணோம். என் கணவருக்குத் தெரிந்தால் மிகவும் கோபப்படுவார் என்றார்கள். உன் செல் நம்பரை அடித்துப்பார். நீ தவறுதலாக எங்காவது வைத்திருந்தால், அது அடிப்பதிலிருந்து தெரிந்துகொள்ளலாம் என ஒரு ஆசிரியைத் தன் phone-ஐ நீட்டினார்கள்.

பயனில்லை, நான் வகுப்புக்குத் தொந்தரவாக இருக்கக்கூடாது என switch off செய்து வைத்திருந்தேன் எனச் சொல்லி அழுதார்கள். இனியனுக்குப் பாவமாக இருந்தது. தான் cellஐ எடுத்ததைச் சொல்லிவிடலாமா? ஆனால் திட்டுவார்களே என்ற பயத்தில் பேசாமல் இருந்துவிட்டான். வீட்டுக்குப் போனவுடன், அந்த செல்லைத் தன் புத்தக அலமாரியில், புத்தகங்களுக்குப் பின்னால் ஒளித்து வைத்தான். அவன் ஆசைப்பட்டு எடுத்துவந்த செல்லில் ஒருமுறை கூட பேசமுடியவில்லை.

பின் அந்த வாரத்தின் துவக்கநாளான ஞாயிற்றுக்கிழமையன்று, பள்ளிக்குச் சென்றுவிட்டுத் திரும்பிய அவன், தன் தம்பி சேகரன், வாந்தியெடுத்துக் கொண்டிருப்பதைக் கண்டு அதிர்ந்து போனான். என்னம்மா, என்ன ஆயிற்று? என பதறியபடியே தம்பியின் அருகில் முதுகைத் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்த அம்மாவிடம் கேட்டான். என்னவென்று தெரியவில்லையே! வீட்டுக்கு வரும்போதே வயிறு வலிக்கிறது என்றான். இப்போது வாந்தியெடுத்துவிட்டான் எனப் பதிலளித்த அம்மா அவனுக்காக ஜெபிக்கத் துவங்கினார்கள்.

தன் தம்பியோடு அன்பாக பேசி, என்னடா பள்ளியில் நடந்தது, எனக் கேட்டான் இனியவன். தம்பி மறைக்கமுடியாமல், அண்ணா, இன்றைக்கு நாதன் வகுப்புக்குச் சாக்லேட் கொண்டுவந்திருந்தான். அவனுடைய மாமா சுவிஸ் நாட்டிலிருந்து கொண்டுவந்தாராம். அவனுக்குத் தெரியாமல் நான் கூடுதலாக 2 சாக்லேட் எடுத்து சாப்பிட்டுவிட்டேன் என ஒப்புக்கொண்டான். இதைக் கேட்டுக் கொண்டிருந்த அம்மா, அந்த சாக்லேட்டுகளில் பழைய சாக்லேட்டும் கலந்திருக்கவேண்டும். காலாவதியான சாக்லேட்டைச் சாப்பிடுவது உயிருக்கு ஆபத்தாகிவிடும் எனப் பயந்தார்கள். உடனடியாக அருகிலிருந்த மருத்துவமனைக்கு சேகரனை அழைத்துச் சென்றார்கள். சேகரன் ஏற்கனவே வாந்தி எடுத்திருந்தபடியால், எந்த ஆபத்தும் உண்டாகவில்லை. அவன் பிழைத்துக்கொண்டான். சிறிது நேரத்தில் சேகரனை discharge செய்து விட்டார்கள்.

ஆசையின் காரணமாகத் தன் தம்பிக்கு ஏற்பட்ட ஆபத்து அவனுக்குச் சரியான எச்சரிப்பாக இருந்தது. வீட்டுக்கு வந்த அம்மாவிடம், அம்மா, Junior church teacher செல்போனை நான் திருடிவிட்டேன். என்னை மன்னித்துவிடுங்கள் எனச் சொல்லிவிட்டு அந்த phoneஐக் கொடுத்தான். அவர்களுடைய அடுத்த தெருவில்தான் விமலியின வீடு இருந்தது.

அம்மா இனியனை அழைத்துச் சென்றார்கள். அவன் நடந்ததைச் சொல்லி மன்னிப்பு கேட்கும்படி கூறினார்கள். விமலியிடம், இனியன், "இனிமேல் இப்படி பிறர் பொருளை இச்சிக்க மாட்டேன்" என வாக்கக்கொடுத்து நடந்ததைக் கூறிவிட்டு மன்னிப்பு கேட்டான். Very Good. Praise the Lord என விமலி அவன் முதுகில் தட்டிக் கொடுத்தார்கள். அந்த phoneஐப் பெற்றுக்கொண்டு விமலி மகிழ்ச்சியானார்கள்.

வேதவாசிப்புப் பகுதி : 1 பேதுரு 1:5-7
மனப்பாட வசனம் : யாத்திராகமம் 20:7

உங்களுக்காக ஜெபிக்கும்
திருமதி.ஜெனி.ஃபர் ஆல்வின், உதவி ஆயரம்மா.

மரித்தேன், ஆனாலும், இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன் என்று கூறி மரணத்தை வென்று இன்றும் நமக்குள்ளே வாசமாயிருக்கும் நம்முடைய ஜீவாதிபதியின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.

ஏப்ரல் 1-ம் தேதி, மனுக்குலத்துக்கு மகா மீட்பையும், நம்பிக்கையையும் பெற்றுத் தந்த கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைச் சிறப்பாகக் கொண்டாட தேவன் உதவி செய்தார். இப்பண்டிகை ஆராதனையில், நம்முடைய பரிசுத்த வார ஆராதனைகளைச் சிறப்பாக நடத்தித் தந்த Rev.Dr.Samuel Jacob அவர்கள் தேவசெய்தி அளித்து சிறப்பித்தார்கள்.

ஏப்ரல் 13-ம் தேதி, நம் ஆலயத்தின் சார்பாக லத்தி.ஃபா மருத்துவமனையில் இரத்ததான முகாம் நடைபெற்றது. உயிர்காக்கும் சேவை மனப்பாங்கோடு, உற்சாகமாகப் பங்குபெற்ற நமது சபை அங்கத்தினர்களுக்கும், இம்முகாமைச் சிறப்பாக ஒருங்கிணைக்க உதவிய தன்னார்வத் தொண்டர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்நாளின் ஆலய ஆராதனையில் வேலூர் பேராயத்தைச் சேர்ந்த Rev.Isaac Fernandez அவர்கள் பங்குபெற்றார்கள். மே மாதத்தில் நடைபெறும் வருடாந்தர பொதுக்குழுக் கூட்டத்தை முன்னிட்டு அன்று, சபையின் வாக்காளர் பட்டியல் சபைமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது.

ஏப்ரல் 20-ம் தேதி திருவிருந்து ஆராதனையில் Rev.Edwin Ponniah அவர்கள் பங்குபெற்றார்கள். ஏப்ரல் 27-ம் தேதி Rev.Charls Edwin அவர்கள் செய்தி தந்து சிறப்பித்தார்கள். 20,27-ம் தேதிகளிலும் வாக்காளர் பட்டியல் மற்றும் திருச்சபையின் சட்டதிருத்தத்தின் Draft-ம் சபையார் பார்வைக்கு வைக்கப்பட்டன.

இம்மாதம் நடைபெற உள்ள திடப்படுத்துதல் மற்றும் சபைநாள் ஆராதனைக்காகவும், அவ்வாராதனையைச் சிறப்பித்து நடத்த வருகை தரவிருக்கும் பிரதமப் பேராயர் Most.Rev.Dr.Thomas K.Ommen அவர்களுக்காகவும், திடப்படுத்துதலுக்கு ஆயத்தமாகும் நம் சபை பிள்ளைகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவும் சபையார் ஜெபிக்குமாறு அன்புடன் கெட்டுக்கொள்கிறேன்.

Jernaus Britto, Secretary.

**NEW MEMBERS LIST**

| No. | NAME | MEM. No. | AREA |
|---|---|---|---|
| 1. | Mr.R.M.Franklin Raj | 2781 | Dubai |
| 2. | Mr.Sam Isaac Rajan | 2782 | Dubai |

## JUNIOR CHURCH RETREAT 2018

**Theme: U-TURN** **Theme Verse: JEREMIAH 24:7b**

**I will be their God, for they will return to me with their whole heart**

Venue: **JSS International School, Barsha**
Date: **11-05-2018**
Time: **9:00 am - 4:00 pm**

*Please encourage your children to attend the retreat. It will be a fruitful one for them.*

விழிப்படைந்த தொழிலாளர்
களிப்படைந்த திருநாள்
துளிர்த்தெழுந்த தே(ன்)நாள்
மேமாதத்த முதநாள்

வாழ்வடைந்தஒளி வளர்வடைந்தநீள்வழி
வேலைக்கொரு உத்ரவாதம்
ஆரோக்கிய மருத்துவம்
அடுக்கடுக்காய்ப் பாதுகாப்பும்

உழைத்ததுஏழை வளர்த்ததுவளத்தை
முதலாளிகளே மகிழ
தொழிலாளிகளை வறுக்க
பழிவிழுந்து துடிக்க

இழைத்ததுஏழை பிழிந்ததுஉணர்வை
உலகிலெதிர் ஒலிக்க
நொந்தசிந்தை ஏங்க
உள்ளுணர்வு விழிக்க

வழிதேடி விழிபிதுங்கி
விழித்திருந்த காலம்
விழிதிறந்தது அறிவுலகம்
நெறிகண்டது புதுயுகம்

தொழிலாளிகளும் முதலாளிகளும்
கைகுலுக்கிய விடிவாம்
வேலைக்கேற்ற கூலியாம்
விடுப்பு,வேலை நேரமும்

விவிலியத்தின்ஒளி வியாபித்தவழி
படைத்துமுடித்து ஓய்ந்திருந்தார்
மக்கள்பாக்க கர்த்தர்
ஏழுநாளும் உழைத்தார்

தவிப்பின்றிவிரும்பி உழைத்திருப்போர்
இராஜாமுன் நிற்பார்
வெற்றிவழி திறப்பார்
வேதத்தைமுன் வைப்பார்

வியர்வைசிந்தி அயர்வைமுந்தி
வாழ்வதுதான் வாழ்க்கை
ஓய்வதல்ல கற்க
உத்வேகம் சிறக்க

செய்யமறுத்தல் வேலையென்றால்
சாப்பிடச்சொல் மறுப்பை
வீணடித்தால் பொழுதை
விட்டுவிடு புசிப்பை

உழுதுநடுவோன் முழுத்தகுதியுடையோன்
கூலிகையில் பெறுவான்
குதூகலத்தில் ருசிப்பான்
குடும்பத்தை வாழ்விப்பான்

தொழிலாளியின் தொழிற்கூலியை
விடியுமட்டும் வைக்காதே
கூலிகுறைத்தும் போடாதே
உழைக்கிறவாய் கட்டாதே !

ஆதாரம் : ஆதியாகமம் 2:2,3
நீதிமொழிகள் 22:29
2 தெசலோ. 3:10
1 கொரிந்தியர் 3:8

கவிதை எண் : 208.

கவி புனைவு : மணிமுத்து.

# ஆராதனை பாடல்கள் - மே 2018

பாமாலை - கீர்த்தனை

ஆராதனை ஆரம்ப கவி : பாமாலை 1 அனாதியான கர்த்தரே

ஆராதனை இறுதி கவி : கீர்த்தனை 30 அனுக்ரக வார்த்தையோடே

| | | |
|---|---|---|
| 04-05-2018 | திடப்படுத்துதல் ஆராதனை | |
| பாமாலை | 16 | போற்றும் போற்றும் |
| பாமாலை | 171 | எப்போதும், இயேசுநாதா |
| கீர்த்தனை | 79 | ஆவியை மழைபோலே யூற்றும் |
| கீர்த்தனை | 187 | கர்த்தரின் பந்தியில் வா |
| கீர்த்தனை | 164 | தந்தேன் என்னை இயேசுவே |
| 11-05-2018 | | |
| பாமாலை | 153 | ஆ, என்னில் நூறு வாயும் நாவும் |
| பாமாலை | 41 | நேர்த்தியானதனைத்தும் |
| கீர்த்தனை | 36 | கண்களை ஏறெடுப்பேன் |
| கீர்த்தனை | 4 | ஆத்துமமே, என் முழு உள்ளமே |
| கீர்த்தனை | 13 | சீர்மிகு வான்புவி தேவா, |
| 18-05-2018 | | |
| பாமாலை | 89 | சுத்த ஆவி, என்னில் தங்கும் |
| பாமாலை | 88 | ஊதும், தெய்வாவியை |
| கீர்த்தனை | 80 | ஆவியை அருளுமே, சுவாமி |
| கீர்த்தனை | 81 | உந்தன் ஆவியே, சுவாமி |
| பாமாலை | 90 | தெய்வாவீ மனவாசராய் |
| 25-05-2018 | | |
| பாமாலை | 191 | என்னிடத்தில் பாலர் யாரும் |
| பாமாலை | 192 | பாலரே, ஓர் நேசர் உண்டு |
| கீர்த்தனை | 175 | பயந்து கர்த்தரின் பாதை |
| கீர்த்தனை | 182 | வீராதி வீரர் இயேசு சேனை |
| பாமாலை | 199 | இயேசுவை நம்பி |
| பாமாலை | 190 | இயேசு எங்கள் மேய்ப்பர் (பின் பவனி கீதம்) |

# நீங்கள் கிறிஸ்தவரா...

**அநியாயமாய் வந்த அதிக வருமானத்திலும், நியாயமாய் வந்த கொஞ்ச வருமானமே உத்தமம்.** நீதிமொழிகள் 16:8

கொள்ளை
லாபமே
கொள்கையாய்
கொண்டவர்
இன்றுவரை...
புலப்படாமலே
கலப்படம்...
உண்ணும்
பொருட்களில்
கலந்துருவாங்க
மக்கள் அதையும்
மறந்திருவாங்க
மறைந்து இருப்பது
மெல்ல கொல்லும்
விஷம் என்பது
புரியாதவங்க
இவங்க...
மனிதரின்
மனதை மயக்கும்
மதுவை விற்று
மலைமலையாய்
பணம்
சம்பாதிப்பதைவிட
காலையும் மாலையும்
நடையாய் நடந்து
கடலை விற்று
காலணா
சம்பாதிப்பதே மேல்
என்றது. அந்தக்
காலம்.. இந்தக்
காலம் இதை
ஏற்காதுதானே...
அன்பே பிரதானம்
இயேசு போதித்த
அன்பை விட்டுவிட்டு

ஆயுதங்கள் விற்று
அதிக பணம்
சம்பாதிக்கும்
நாடுகள் பல பல..
இந்த ஆயுதமோ
போகாத
இடம் போய்
சேர்ந்து உலகுக்கு
நாசம் விளைவிக்கிறது.
பூனைக்கு
மணிகட்டுவது யார்...
ஐய்யகோ...
பணம்... பணம்...
இதில்
கண்ணாய் இருப்பவர்
கடமையை
மறப்பவர்
காசுக்காக
கொலை செய்யவும்
துணிபவர்
காலமாற்றம்
வரும் காலம்
கர்த்தரின்
கிருபை இல்லாது
போகும் போது
கலங்கி நிற்பார்
ஐய்யகோ...
உத்தமமாக
உழைக்கும்
ஏழைக்கு வரும்
வருமானம்
கர்த்தரால்
வந்ததென
சந்தோஷமாக
வாழ்வதையும்
காணலாம்.

மகிழ்ச்சி என்பது
பணத்தில் இல்லை
மனதில்தான்.
இரவு பகல்
ஏழை பணக்காரன்
இன்பம் துன்பம்
எதிலும் இருவிதம்
நியாயம் அநியாயம்
அன்பரே... அன்பரே...
எப்படி வாழ விருப்பம்...
நியாயமா..?
அநியாயமா...?
சிந்திப்போம்
செயல்படுவோம்.
உலகில் நமக்கு
எதிலுமே பற்று
தேவையில்லை
செல்வமோ
வறுமையோ
மகிழ்ச்சியோ
துன்பமோ...
சமமாக
எடுத்துக்கொள்ளுங்கள்
ஒருவர்...
இயேசுவின் மீது
பற்றுவைப்பதே
பிறவிப்பயன்.
பீடை, பிணியிலா
அணிகலன்.
எதையும் நாடாமல்
இயேசுவையே
சிந்தித்து இருக்கும்
ஞானிகளின்
யோக நலனை
இயேசுவே ஏற்றுக்
கொள்கிறார்.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

## Powerful Prayers from the Bible

### The Disciples' Prayer

"Lord, teach us to pray." Luke 11:1

Do you wish to know the right way to pray? The Lord's Prayer is the right model to start with. The Lord's Prayer is a blueprint to draw you closer to God. Turn to the "Our Father" and other powerful Scripture to build your faith. Whenever you are struggling not knowing how to pray, just say a silent prayer," Lord teach us how to pray."

### Jacob's Prayer

"I won't let you go until you bless me."Genesis 32:26

Though a smart deceiver Jacob thought he can get away with his smartness. The struggles of life taught him, that he can no longer get away with worldly tactics. If you have messed up your life, remember to turn to God to change your life and make you a new person and be a blessing.

### Samuel's Prayer

"Speak, Lord, for your servant is listening."

Based on the words of the boy Samuel (1 Samuel 3:9), pray these words to quiet your soul and express your desire to hear from God. Ask God to give you listening ears and an understanding heart.

### David's Prayer

"Create in me a clean heart, O God; and renew a right spirit within me. Cast me not away from thy presence; and take not thy holy spirit from me. Restore unto me the joy of thy salvation; and uphold me with thy free spirit". Ps 51: 10-12

When David sinned against God, he confessed his sins truly before God and asked for a new life. When you've made a poor decision or wavered from His instructions, simply ask for forgiveness, take His hand and get back on track. When temptations or "enemies" threaten your faith journey, help is just a prayer away.

### Isaiah's Prayer

"Then I heard the Lord's voice saying, 'Whom should I send, and who will go for us?' I said, 'I'm here; send me' Isaiah 6:8

When God calls you, do you respond with a heartfelt, "Send me!" or do you list reasons why you aren't suited for the job? God often presents new opportunities that are out of our comfort zone to help us grow into the people we are meant to be. The next time you feel God asking you to do His work, wholeheartedly step forward.

### Jesus' Prayer

"Not my will, but yours."

This prayer, of course, echoes Jesus' prayer in the Garden of Gethsemane (Luke 22:42). When you are anxious or impatient, this prayer helps to surrender all your plans and gives you the strength to fulfill God's plan.

Courtesy - Guidepost

Answers sent by the following children for April 2018

Age below 12 years

1.Dany Solomon

Age above 12 years

1. Jerusha Rejisan
2. Alston Alwyn

# திருச்சபை ஜெபநாள் 06-05-2018 (முதல் ஞாயிறு)

"கர்த்தாவே, என் வார்த்தைகளுக்குச் செவிகொடும்,
என் தியானத்தைக் கவனியும்." சங்கீதம் 5:1

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- உயிர்ப்பின் பண்டிகை ஆராதனை, இரத்த தான முகாம் மற்றும் ஆராதனைகள் யாவும் சிறப்பாக நடைபெற கர்த்தர் பாராட்டின கிருபைகளுக்காக அவரைத் துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக

- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்துமக்களின் சமாதானத்துக்காக,
- உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், தேவ ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் ஆகிய தேவ கிருபைக்காக,
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக, நமது பிள்ளைகளின் கல்விமுன்னேற்றம், மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
- திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத் திற்காக ஜெபிப்போர், மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் அனைவருக்கும் தேவ ஒத்தாசை, கிருபைக்காக, குடும்பங்களை விட்டுத் தனியே பணிக்காக வந்தவர்களுக்காக
- அனைத்து கல்வி, சமுதாய, மருத்துவ ஊழியங்களுக்காய் ஜெபிப்போம்
- நம் வாழ்வின் அனைத்து சூழ்நிலைகளிலும் தேவ ஆளுகை, வல்லமைக்காக, வழிநடத்துதல்களுக்காக,
- பொருளாதார நெருக்கடியினால் வேலையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நீங்கவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய தேவைகள் சந்திக்கப்படவும்,
- குடும்பங்களில், வேலையிடங்களில் மன அழுத்தத்தோடு வாழும் மக்கள் நல்வாழ்வு பெற ஜெபிப்போம்.
- திடப்படுத்துதல் மற்றும் சபைநாள், உழைப்பாளர் தின ஆராதனைகளுக்காகவும், Junior Church Retreat ஒழுங்குகளுக்காகவும், உயர் கல்விக்காக ஆயத்தப்படும் பிள்ளைகள் ஏற்ற கல்வி பெற்று வாழ்வு உயர்த்தப்படவும் ஜெபிப்போம்.
- உலகின், இந்தியாவின், தமிழ்நாட்டின் அரசியல் நிலை சீரடைய ஜெபிப்போம்.

"கர்த்தாவே, இரட்சியும்; நாங்கள் கூப்பிடுகிற நாளிலே
ராஜா எங்களுக்குச் செவிகொடுப்பாராக." சங்கீதம் 20:9

நமக்கென ஓர் ஆலயம் கட்டுவதற்கான இடவசதியும், பொருளாதார தேவைகளும் சந்திக்கப்பட சபையார் தங்கள் தனி ஜெபங்களிலும், குடும்ப ஜெபங்களிலும் ஊக்கமாக தொடர்ந்து ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

# கேதுரு / தேவதாரு மரம்

கேதுரு மரம் மரங்களுக்குள்ளே மகா கீர்த்தியுள்ளது. சாலமோன் மன்னன் தேவனுக்கு ஆலயம் கட்ட இந்த மரத்தைப் பயன்படுத்தியதால் இது "தேவதாரு" என அழைக்கப்படுகிறது. "நீதிமான் ...லீபனோனிலுள்ள கேதுருவைப்போல் வளருவான்" (சங். 92:12). நீதிமானின் வளர்ச்சி நித்திய கீர்த்தியுள்ளது. கேதுரு போன்றவர்கள் விசுவாசத்தில் ஓங்கி வளருபவர்கள். இம்மரம் நன்றாக வளர வெளிச்சம் மிகவும் தேவைப்படுகிறது. நீர்கால்களின் ஓரத்தில் நடப்பட்ட மரங்கள் மிகவும் செழித்து பலனுடையதாக வளரும். இதன் வேர்கள் மிகவும் ஆழமாக, உறுதியாக இம்மரத்தை மண்ணோடு இறுகப் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கும். இதனால் இவை நீண்ட உயரம் வளர்வதோடு நீண்ட ஆயுட்காலம் கொண்டவையாகவும் திகழ்கின்றன. இந்த சிறந்த மரம் ஏறக்குறைய 2000 வருஷம் வரை நிற்கும் என கூறப்படுகிறது. சுமார் 300 வயது ஆன மரம் ஏறக்குறைய 250-300 அடி உயரம் வளர்ந்து, அதற்கேற்ற பருமன் கொண்டதாகவும காணப்படும். இம்மரத்தின் வயதை அதனுடைய தடியில் காணப்படும் வரிகள் அல்லது "ஆண்டு வளையங்கள்" வைத்துக் கணக்கிடலாம். இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம் என்று கண்ட பிலேயாம், "அவைகள்,... தண்ணீர் அருகே உள்ள கேதுரு விருட்சங்களைப் போலவும் இருக்கிறது"(எண். 24:6) என்றான். சங்கீதம் 1:2,3ல் கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, அதில் இரவும் பகலும் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான், அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டவன், அவன் செய்வதெல்லாம் வாய்க்கும் என்றும் பார்க்கிறோம்.

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள் என்று கரம் நீட்டி அழைத்து இளைப்பாறுதல் அளிக்கும் இயேசுவினால் நாட்டப்பட்ட விருட்சங்களைக் குறித்து சங்கீதம் 104:16,17ல் "கர்த்தருடைய விருட்சங்களும், அவர் நாட்டின லீபனோனின் கேதுருக்களும் சாரத்தினால் நிறைந்திருக்கும். அங்கே குருவிகள் கூடுகட்டும் தேவதாரு விருட்சங்கள் கொக்குகளின் குடியிருப்பு." தேவனால் நாட்டப்பட்டவர்கள் ஆதரவின்றி அலைந்து இளைப்பாறுதலின்றி தவிக்கும் ஆத்துமாக்களைக் கரம் கொடுத்து அணைத்து அவர்களுக்கு ஆறுதலின் பாத்திரமாக, அவர்கள் இளைப்பாறும் இடம் உண்டாகும்படி நல்மனசாட்சியும், பரந்த மனப்பான்மையும் உடையவர்களாய் இருக்க வேண்டும். நம்மீது காற்று போன்ற பிரச்சனைகள் மோதி தாக்கலாம். ஆனால் அநேகர் நம்மால் கிறிஸ்துவின் ஆறுதலைப் பெறுகின்றார்கள் என்பதை நினைத்து நாம் செய்யும் சிறு ஊழியத்தையும் தளராமல் செய்வோம். இந்த பறவைகள், நன்மைகளை அனுபவித்து நன்றி மறந்து செல்வதுபோல, நாமும் பிரதி பலன் எதிர்பாராமல், சோர்ந்து போகாமல் கிரியைகளுக்குப் பலன் அளிக்கிறவர் கர்த்தர் என்று அறிந்து நற்கிரியைகளைத் தொடர்ந்து செய்வோம்.

மற்றும் இந்த மரத்தின் கட்டைகளை நியாயப்பிரமாண காலத்தில் ஆசாரியர்கள் சுத்திகரிப்புக்குப் பயன்படுத்தினார்கள். "சுத்திகரிக்கப்பட வேண்டியவனுக்காக,... கேதுருக் கட்டையையும், சிவப்பு நூலையும், ... வாங்கிவரக் கட்டளையிடக்கடவன்"(லேவி. 14:4). பிரதான ஆசாரியரான இயேசு கிறிஸ்து நம்மைக் கொண்டு இந்த உலகத்தை சுத்திகரிக்கும் பணியை செய்ய விரும்புகிறார். ஜனங்களின் பாவங்களை சுட்டிக்காட்டி, பாவிகளுக்காய் விலையேறப்பெற்ற இரத்தத்தைக் கொடுத்த இயேசுவை உலகத்திற்குக் காட்ட வேண்டும்.

